மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கேயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முப்பெரும் விழா பொதுக்கூட்ட பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் நடுவராக தலைமை அரசு கொறடா கோவி.செழியன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பட்டிமன்ற பேச்சாளர்கள் நெல்லிகுப்பம் புகழேந்தி, நாகை நாகராஜன், கரூர் முரளி, தூத்துக்குடி சரத்பாலா, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மயிலாடுதுறை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம் மற்றும் ஆர்.அருள்செல்வம், என்.விஜயபாலன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலில், அமிர்த. விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின்

டிஜிட்டல் தகவல் தொழில்நுட்ப விதிமுறைகளுக்கு தடை! மும்பை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

மும்பை, செப். 23- ஒன்றிய அரசு புதிய டிஜிட்டல் தகவல் தொழில் நுட்ப விதிமுறைகளை கடந்த ஆண்டு வெளியிட்டது. இதற்கு எதிராக மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு மாறுபட்ட தீர்ப்பை வழங்கியது. இதனை தொடர்ந்து வழக்கு மூன்றாவது நீதிபதிக்கு அனுப்பப்பட்டது. இதனிடையே, Fact check அமைப்பை உருவாக்கும் வகையில் ஒன்றிய அரசு மீண்டும் திருத்திய விதிமுறைகளை வெளியிட்டது. இதற்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது. இந்த விதிமுறைகள் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என்று உச்சநீதிமன்றம் கூறியது. மும்பை உயர் நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பு வெளியாகும் வரை Fact check யூனிட்டை அமைக்க கூடாது என்று உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, வழக்கை விசாரித்த மும்பை உயர்நீதிமன்ற மூன்றாவது நீதிபதி, தற்போது தீர்ப்பு வழங்கி உள்ளார். அதில், டிஜிட்டல் தகவல் தொழில் நுட்ப விதிமுறைகள் அரசியல் சாசன பிரிவு 14 மற்றும் 19க்கு எதிரானது என்று கூறி, அதற்கு தடை விதித்த உத்தரவை உறுதி செய்வதாக தீர்ப்பளித்தார்.

திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் உரிமை சீட்டு வழங்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் உறுப்பினர் உரிமை சீட்டுக்களை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே.கே.ரவிச்சந்திரன், வழக்கறிஞர் ச.யுவராஜ், ந.வீரகாளி வெங்கடேஷ், சா.கவியரசு உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

"சிந்துசமவெளி – திராவிடர் நாகரிகம்" என்ற தொல்லியல் ஆய்வு முடிவை 'திரிப்பதற்குத் திட்டமிடுவதா?

வரலாற்றைத் திரித்தால், தமிழ்நாடு எரிமலையாகும் - எச்சரிக்கை!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 22 - திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட நாகரிகம் காலத்தால் மூத்தது; கருத்தால் விளைந்தது, பண்பாட்டால் உயர்ந்தது. நமது சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் நகரப் பண்பாடும், வளர்ச்சியும் சிந்துவெளியின் தொல்லியல் ஆகும்.

ஆய்வின்மூலம், தொல்லியல் சர்வ துணையுடன் சர். ஜான் மார்ஷல் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து, மறுக்க முடியாத சான்றுடன்கூட கருது கோளை முன்வைத்து உலகை வியக்க வைத்தனர்.

சிந்து சமவெளி நாகரிகத்தைத் திரிப்பதா?

இந்திய வரலாற்றைத் திரித்து, வேதங்கள், இதிகாசங்கள், புராணங்களோடு மட்டுமே வரலாற்றைத் தொடர்புபடுத்தி, ஏதோ வேத கால நாகரிகம்தான் அது - திசை திருப்பல்கள், திரிபுவாதமும் நிலைத்துவிட வேண்டும் என்று திட்டமிட்டு ஆரியம் முயன்றது. ஓர் ஆய்வாளர் என்கிற தன்மையில், விருப்பு - வெறுப்பு - தற்சார்பு நிலை என்பதற்கெல்லாம் அப்பாற்பட்ட வரலாற்று ஆய்வுக்காகவே தனித்து நின்று அந்த சிந்து வெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்பதை 1924 - செப்டம்பர் 20 ஆம் தேதி 'தி இல்லஸ்ட்ரேட் லண்டன் நியூஸ் ('The Illustrated London News') என்ற இதழில் சர் ஜான் மார்ஷல் கண்டறிந்ததை உலகுக்கு அறிவித்து ஒரு புது வெளிச்சத்தைப் பாய்ச்சினார்!

இப்போது தமிழ்நாட்டில் கீழடி ஆய்வு - சங்க இலக்கியப் பதிவுகள், தொடர்புகள் குறித்து நமது வரலாற்று ஆய்வாளர்கள் அந்த வெளிச்சத்தின் பரவுதல் - தாக்கம்பற்றி

ஆய்வு செய்து வருகின்றனர் என்பது மகிழத்தக்கச் செய்தி! (20.9.2024).

பொதுக்குழு தீர்மானம்!

சில மாதங்களுக்கு முன்பே திராவிடர் கழகப் பொதுக் குழு - குடந்தையில் இதை நூற்றாண்டாகக் கொண்டாடிடத் தீர்மானித்தது!

சர். ஜான் மார்ஷல் ஆய்வினால் மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் தொல்லியல் துறை மூலம் கண்டறிந்தவற்றை வைத்து திராவிட நாகரிகம் என்று உறுதி செய்தார்!

அதற்கான ஆய்வு நாயகரான சர். ஜான் மார்ஷல் அவர்களுக்குத் தமிழ்நாட்டில் சிலை அமைப்பதோடு, வரலாற்று ஆய்வின் பொன்னேடு பதித்துள்ள தக்க சான்றோர்களை அழைத்து ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கையும் தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசு ஏற்பாடு செய்யும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் நேற்று முன் தினம் (20.9.2024) உறுதி செய்துள்ளது மிகவும் பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய ஒன்று!

இதற்கிடையில், சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பின்னால் உருவான வேதகால நாகரிகமாகக் காட்ட திட்டமிட்டே கால வரிசையில் முன்னுக்குத்தள்ளி, வழமையான தங்களது திரிபு வாதத்தை ஆரியமும், அதன் மத, அரசியல் வெளிப்பாடான ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. அரசும் அதனை வேத கால நாகரிகம் என்று அதிகாரப்பூர்வமாக அப்புரட்டினுக்கு முத்திரை குத்தி நிலை நிறுத்தி, பார்ப்பனர்களையே கொண்ட ஒரு குழு அமைத்து, அரசு இயந்திரத்தின் அச்சையே மாற்றத் தொடங்கி, முழு மூச்சாக இறங்கிவிட்டனர்!

இதைச் சுட்டிக்காட்டி, பல மாதங்களுக்கு முன்பே கண்டித்து எழுதினோம்.

அமைச்சர் துரைமுருகனின் சரியான கருத்து!

இதைத்தான் சென்னையில், தி.மு.க. முப்பெரும் விழாவில் தி.மு.க.வின் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கண்டித்து சரியான கருத்தினைச் சொன்னார்- பொருத்தமாகக் கேட்டார்!

அதனை அடுத்து ஆசிரியர் கடிதமாக, அவர்மீது பாய்ந்துள்ளது

"தற்போதுள்ள சரித்திரத்தால் என்ன கேடு? ஹரப்பா, மொஹஞ்சதாரோ, திராவிட நாகரிகம் என்றோம். அது ஆரியர்கள் நாகரிகம் என, சமீபத்தில் டில்லி அரசு, இந்தியாவின் சரித்திரத்தை மாற்றி எழுதுவதற்காக அமைத்துள்ள கமிட்டி கூறுகிறது. அதாவது, அந்த ஆரிய நாகரிகம், சரஸ்வதி நாகரிகம் என்கிறது!

அந்தக் கமிட்டியில் 17 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று பேர் அரசு அதிகாரிகள் - மீதி 14 பேரும் 'பிராமணர்கள்'. எனவே, பழைய பல்லவியைப் பாட வேண்டிய நிலை; இந்த நிலை தொடர்ந்தால், தி.மு.க. தன் வீரியத்தைக் காட்டும் நிலை வரும்" என்று சரியான எச்சரிக்கையைத் தந்துள்ளார்!

பார்ப்பனர்கள் திருந்தி விட்டார்களா?

தி.மு.க. நிகழ்ச்சி அது என்பதால், தி.மு.க. நிலைப்பாடு (வருங்காலத்தில்) இது என்று அறிவித்தது - பெரியார் மண்ணான தமிழ்நாடு கட்சி, மதம், ஜாதி பேதமின்றி கொதித்து எரிமலையாய் வெடித்துக் கிளம்புவது உறுதி! உறுதி!!

இப்போது 'பார்ப்பனர்கள் திருந்தி விட்டார்கள்' என்று சில "தமிழ்ப் புண்ணாக்குகள்" உளறுகின்றன. அவர்களுக்கு இத்தகவலை கவனப்படுத்தி, இன்னும் ஆரியத்தின் அடிவருடிகளாகாதீர் என்று எச்சரிக்கின்றோம்!

'சுட்டால்தான் நெருப்பு' என்பதுபோல, சுடாமலேயே நெருப்பின் பொறுப்பு அது என்பதை உணர்ந்துகொள்வீர்!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

மணிப்பூர் மாநில அமைச்சரின்

உதவியாளர் ஆயுதக் கும்பலால் கடத்தல்!

மியான்மரில் பயிற்சி பெற்ற 900 குக்கி பிரிவினர் மணிப்பூரில் ஊடுருவல்!

ஒன்றிய அரசின் உளவுப்பிரிவின் எச்சரிக்கையால் பரபரப்பு!

இம்பால், செப்.22- மணிப்பூர் மாநில அமைச்சரின் உதவியாளர் ஆயுத கும்பலால் கடத்தப்பட்டதால் பரபரப்பு நிலவியது. மியான்மரில் பயிற்சி பெற்ற 900 குக்கி பிரிவினர் மணிப்பூரில் ஊருடுவியதாக உளவுப்பிரிவு எச்சரிக்கையால் அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மியான்மர் நாட்டில் பயிற்சி பெற்ற 900 குக்கி பிரிவினர் ஆயுதங்களுடன் மணிப்பூர் மாநிலத்திற்குள் ஊடுருவி உள்ளதாக உளவுப் பிரிவு எச்சரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து மணிப்பூர் மாநிலத்தில் பல மேத்தே கிராமங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனை மாநில பாதுகாப்பு ஆலோசகர் குல்தீப் சிங் உறுதி செய்துள்ளார். இதனிடையே, மணிப்பூர் உணவுத் துறை அமைச்சரின் உதவியாளர் கடத்தப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுதங்களுடன் வந்த ஒரு கும்பல் நேற்று காலை 8 மணி அளவில் அமைச்சரின் உதவியாளரை கடத்தி சென்றுள்ளது. 24 மணி நேரமாகியும் இதுவரை தகவல் இல்லை என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அமைச்சரின் உதவியாளரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மணிப்பூர் போலீசார் கூறியுள்ளனர்.

கள்ளக்குறிச்சி அருகே காரனூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 105 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 8 லட்சத்து 57 ஆயிரத்து,696 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள்கள், மடக்கு சக்கர நாற்காலிகள், ஊன்று கோல்கள், ரோலேட்டர் திறன்பேசி, பிரய்லி கேன், காதொலி கருவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினார்கள். இதில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சுப்பிரமணி, முடநீக்கியல் வல்லுநர் பிரபாகரன், அலிம்கோ நிறுவனத்தினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

டெல்லி முதல்வராக அதிஷி பதவியேற்பு!

5 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர்

டெல்லி, செப். 23 - டெல்லியின் புதிய முதலமைச்சராக அதிஷி பதவியேற்றுக்கொண்டார். மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் 155 நாளாக திகார் சிறையில் இருந்த ஆம்ஆத்மி தலைவரும், டெல்லி முதல்வராகவும் இருந்த கெஜ்ரிவால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அடுத்த இரண்டு நாள்களிலேயே கெஜ்ரிவால், தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்திருந்தார். தொடர்ந்து, புதிய முதல்வராக அமைச்சர் அடிசி தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த செவ்வாயன்று முதல்வர் பதவியை கெஜ்ரிவால் ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார்.

காங்கிரசின் ஷீலா தீட்சித், பாஜகவின் சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோருக்குப் பிறகு டெல்லியின் மூன்றாவது பெண் முதல்வராக அதிஷி இன்று பதவியேற்றுக்கொண்டார். அதிஷிக்கு டெல்லி துணை நிலை ஆளுநர் சக்சேனா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். முதலமைச்சர் அதிஷியுடன் கோபால்ராய், பரத்வாஜ் உள்ளிட்ட 5 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். பதவியேற்பு விழாவில் கெஜ்ரிவால் உள்ளிட்ட ஆம் ஆத்மி தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இதனைத்தொடர்ந்து வரும் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் சட்டமன்றக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அப்போது புதியதாக அமைந்துள்ள அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு கோர வாய்ப்புள்ளது. ஆம் ஆத்மி கட்சிக்கு பெரும்பான்மை பலம் உள்ளதால், நம்பிக்கை வாக்கெடுப்பில் அடிசி தலைமையிலான அரசு வெற்றி பெறும் என்கின்றனர். இதற்கிடையே டெல்லி சட்டமன்ற தேர்தலை முன் கூட்டியே நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை ஆணையம் ஏற்றுக்கொண்டால், தற்போது முதல்வராக பதவியேற்கும் அடிசி வரும் நவம்பர் மாதம் வரை அதாவது சுமார் இரண்டு மாதங்களுக்கு முதல்வர் பதவியில் நீடிப்பார். தற்போதைய சட்டமன்றத்தின் பதவிக்காலம் வரும் பிப்ரவரி 23ம் தேதி முடிவடைய உள்ளதால், சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடியும் வரை தேர்தலை நடத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணையம் முடிவு செய்தால், அடிசியின் பதவிக்காலம் ஐந்து மாதங்கள் வரை இருக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெல்லியின் ஐந்தாவது முதல்வராக வெறும் 52 நாள்கள் (அக்டோபர் 1998 டிசம்பர் 1998) மட்டுமே மறைந்த பாஜக மூத்த தலைவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான சுஷ்மா ஸ்வராஜ் பதவி வகித்தார். அதன்பின் மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவரான ஷீலா தீட்சித், டெல்லியில் 15 ஆண்டுகள், 25 நாள்கள் முதல்வராக (டிசம்பர் 1998 டிசம்பர் 2013) பதவி வகித்தார்.

இவர் தான் டெல்லியின் மிக நீண்ட முதல்வராகப் பதவி வகித்தார். இவரது தலைமையின்கீழ் காங்கிரஸ் கட்சியானது, மூன்று தேர்தல் வெற்றிகளைப் பெற்றது. இந்த நிலையில் டெல்லியின் மூன்றாவது முதல்வராக அடிசி பதவியேற்க உள்ளார். அதேநேரம் மேற்குவங்க மாநிலத்தின் மம்தா பானர்ஜியை தொடர்ந்து, நாட்டின் தற்போதைய இரண்டாவது பெண் முதல்வராகவும் அடிசி பதவியேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி துவக்க விழா!

அரசு செய்தி வெளியீடு!

சென்னை, செப்.23- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுவினர் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நவராத்திரியை முன்னிட்டு, சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி நேற்று (21.09.2024) துவக்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்ய தர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங் மற்றும் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

21.09.2024 முதல் 06.10.2024 வரை நடைபெறும் இக்கண்காட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களான நவராத்திரி கொலு பொம்மைகள், பட்டு, பருத்தி ஆடைகள், செயற்கை ஆபரணங்கள், கைவினைப் பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், மரச் சிற்பங்கள், மூலிகைப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்தி 48 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்வதற்கென தனி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. காலை 10.00 மணி இரவு 08.00 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம். வார இறுதி நாட்களில் பாரம்பரியம் நிறைந்த சிறப்பான கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இத்தகைய சிறப்பு மிக்க விற்பனைக் கண்காட்சியை அனைவரும் கண்டுகளித்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் தரமான பொருட்களை வாங்கி பயன்டைவதோடு மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

டெல்லி மாநகராட்சி நிலைக்குழுத் தேர்தல்

கவுன்சிலர்களை இழுக்க பா.ஜ.க. ரூ.2 கோடி பேரம்!

பா.ஜ.க. மீது 'ஆம் ஆத்மி' கட்சி குற்றச்சாட்டு

டெல்லி, செப். 23 - டெல்லி மாநகராட்சி நிலைக்குழு தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தனது கவுன்சிலர்களிடம் பா.ஜ.க. குதிரை பேரம் நடத்துவதாக ஆம் ஆத்மி கட்சி குற்றம்சாட்டி உள்ளது.

டெல்லி மாநகராட்சியில் காலியாக உள்ள ஒரு நிலைக்குழு உறுப்பினர் பதவிக்கான தேர்தல் வரும் 26ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் முடிந்தது. இதில், ஆம் ஆத்மி சார்பில் நிர்மலா குமாரியும், பா.ஜ.க. சார்பில் சுந்தர் சிங்கும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய ஆம் ஆத்மி எம்.எல்ஏ.வும், டெல்லி மாநகராட்சியின் ஆம் ஆத்மி பொறுப்பாளரு மான துர்கேஷ் பதக், நிலைக்குழு தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தங்கள் கட்சியைச் சேர்ந்த கவுன்சிலர்களுக்கு 50 லட்சம் முதல் 2 கோடி ரூபாய் வரை பணம் கொடுப்பதாக பா.ஜ.க. தற்போது வலை வீசுவதாக குற்றம்சாட்டினார். ஆம் ஆத்மி கவுன்சிலர்கள் பா.ஜ.க.வில் சேரவில்லை என்றால், விசாரணை அமைப்புகள் மூலம் துன்புறுத்துவோம் என்று மிரட்டுவதாகவும் அவர் கூறினார். பவானாவைச் சேர்ந்த ஆம் ஆத்மி கவுன்சிலர் ராம் சந்தரை இதுபோல் மிரட்டி தான், பா.ஜ.க. அவரை வலுக்கட்டாயமாக தனது கட்சியில் சேர்த்தது என்றும், இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் மீண்டும் ஆம் ஆத்மிக்கு திரும்பியபோது, பா.ஜ.க.வினர் அவரை அவரது வீட்டில் இருந்து கடத்திச் சென்றதாகவும் துர்கேஷ் பதக் தெரிவித்தார்.

கடலூர் மண்டல பொறியாளர் அணி ஆய்வுக் கூட்டத்தில் கழக மாநில பொறியாளர் அணி தலைவர் துரை கி. சரவணன் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் எஸ்.கே. கருணாநிதி சிறப்புரையாற்றினார். இதில் மாநில, மண்டல பொறியாளர் அணி நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.